சி.ஆர்.பி.எண்.884/2021, நாள்: 25.3.2021.

ம.சா.1 நேருலால் என்பவரின் வாக்குமூலம்

நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். நான் அனகோடி கிராமத்தில் உள்ள சந்தூரான் கொட்டாயில் குடியிருந்து வருகிறேன். ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இந்த புகாரில் குறிப்பிட்டுள்ள எதிரிகள் என்னை தாக்கியதால் அது குறித்து நான் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் அவர்கள் என் புகாரை ஏற்காததால் இந்த தனிபுகாரை தாக்கல் செய்திருக்கிறேன். கடந்த 13.12.2020ம் தேதி காலை 8.45 மணியளவில் என் வீட்டிற்கு வடக்கில் எனக்கு சொந்தமான இடத்தில் எதிரிகளாகிய வேல்முருகன் மற்றும் 12 பேர் போர்வெல் வண்டி ஒன்றை கொண்டு வந்து நிறுத்தி வைத்திருந்தார்கள். எதற்காக இங்கு நிறுத்தியுள்ளார்கள் என்று தம்பி முனிலால் கேட்டபொழுது பழனி என்னிடம் வந்து காலால் என்னடைய நெஞ்சின் மீதும் வயிற்றின் மீதும் உதைத்தார். எதிரி வெங்கடேசன் கல்லெடுத்து என்மீது எறிந்தார். அப்பொழுதும் என்னுடைய இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது பின்னிட்டு கையால் என் முகம் முழுவதும் அடித்தார். எதிரி உமாசங்கர் என்னுடைய கை, முகம் ஆகிய இடங்களில் கையால் கத்தினார். எதிரி குமார் என்னை முன்னும் பின்னும் தாக்கினார். கரியன் (எ) ராமசாமி கையில் வைத்திருந்த மூங்கில் கோலால் என்னை அடித்தார். எதரி ஈஸ்வரி என்னை தென்னை மட்டையால் அடித்தார். எதிரி அம்பிகா மாட்டு சாணாத்தால் என்னை அடித்தா. எதிரிகள் அனைவரும் என்னை அடிதது கொலை செய்ய முயற்சித்தார்கள். மேற்படி சம்பவத்தை என்னுடைய தம்பி முனிலாலும் அவருடைய மனைவி கமலாவும் நாராயண பிரசாத்தின் மகன் புருஷோத்தமன் என்பவரும் பார்த்தார்கள். எதிரிகள் தாக்கியதால் நான் கீழே விழுந்துவிட்டேன் என்னை என் தம்பி அழைத்துசென்று போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு போச்சம்பள்ளி போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். பின்னிட்டு 15.12.2020ம் தேதியில் நான் போச்சம்பள்ளி கவல் நிலையத்தில் வந்து கேட்டபொழுது அவாகள் சமாதானமாக போகும்படி என்னை வலியுறுத்தினார்கள். அதனால்

நான் அன்று மாலை வலைதளத்தில் என்னுடைய புகாரை பதிவு செய்தேன். அதற்கு பின்னிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த வலைதள புகாரை நான் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஆகியோருக்கு கொடுத்தேன் இதுநாள் வரை நடவடிக்கை எதுவும் எடுக்காதால் இந்த தனிபுகாரை கொடுத்தேன். அதனால் தனிபுகாரை கோப்புக்கு எடுத்து சாட்சிகளை விசாரித்து எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.